# தேர்தல் ஜனநாயகத்தின் எதிர்காலத்தை சூழ்ந்திடும் இருள்மேகங்கள்!

## ‘பீப்பிள்ஸ் டெமாக்ரசி’ தலையங்கம்!

**“பீகார் வாக்காளர் பட்டியல்களில் அயல்நாட்டினர்: தேர்தல் ஆணையம் கூறுகிறது; ‘இந்தியா’ கூட்டணி தரவு குறித்து கேள்வி எழுப்பியிருக்கிறது”** என ஒரு பெரிய தேசிய நாளேடு தன் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக அலறியிருக்கிறது. உண்மையில் இது நம்பமுடியாததாகவே தோன்றுகிறது. பீப்பிள்ஸ் டெமாக்ரசியின் ஜூன் 24 தேதிய தலையங்கத்தில், இந்தியத் தேர்தல் ஆணையம், சிறப்பு தீவிர திருத்தத்திற்காக வெளியிட்டிருந்த முழுமையான காலக்கெடுவை நாம் கோடிட்டுக் காட்டி இருந்தோம். வாசகர்களின் நலனுக்காக மீண்டும் அதனை நாம் நினைவுகூர்ந்திடுவோம். “தேர்தல் வாக்குச்சாவடி அதிகாரிகள் (Booth Level Officers), படிவங்களை வீடு வீடாக விநியோகித்து, நிரப்பப்பட்ட படிவங்களை சேகரித்து, அவற்றைச் சரிபார்க்க வேண்டும். கூடுதலாக உயர் அதிகாரிகள் அவற்றைப் பகுத்தாய்வு செய்து மறுசீரமைப்பு மேற்கொண்டு இறுதிப்படுத்திட வேண்டும், வாக்குச்சாவடிகளின் பட்டியலை அங்கீகரித்திட வேண்டும், 2025 ஆகஸ்ட் 1க்குள் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும், அதைத் தொடர்ந்து 2025 செப்டம்பர் 30 அன்று இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும்.”

**உச்சநீதிமன்ற செயல்முறையை பாதிக்க பரப்பும் தவறான தகவல்!**

உண்மையில் இதுதான் நிலை என்றால், பீகார் வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினர் இருப்பதாக தேர்தல் ஆணையம் எப்படிக் கூற முடியும்? செப்டம்பர் 30ஆம் தேதிக்கு முன்பு தேர்தல் ஆணையத்திடமிருந்து முறையான அறிக்கை எதுவும் வர வாய்ப்பில்லை என்பதால், ஜூலை 28ஆம் தேதி அடுத்த விசாரணை நடைபெறும் நிலையில், உச்ச நீதிமன்றத்தில் நடந்து வரும் நீதித்துறை செயல்முறையை பாதிக்க இந்தத் தவறான தகவலை ஆணைய அதிகாரிகள் சிலர் விதைத்துள்ளனர் என்பதே இதன் பொருளாகும். சிறப்பு தீவிர திருத்தத்தை நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்ற அமர்வு எந்த குறிப்பிட்ட உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்றாலும் (மனுதாரர்கள் அத்தகைய நிவாரணத்தைக் கேட்கவில்லை), எழுப்பப்பட்ட அடிப்படை கேள்விகளுக்கு இன்னும் தேர்தல் ஆணையத்திடமிருந்து தெளிவானமுறையில் பதில்கள் வரவில்லை.

**குடியுரிமை பிரச்சினை : தேர்தல் ஆணையத்துக்கில்லை!**

முதல் கேள்வி: ஒரு வாக்காளரின் குடியுரிமை நிலையைத் தீர்மானிக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளதா? இந்த விஷயத்தில், ஒரு தனிநபர் ஒரு குடிமகனா என்பதைத் தீர்மானிப்பது உள்துறை அமைச்சகத்தின் (MHA) அதிகாரம் என்று உச்சநீதிமன்றத்தின் அமர்வாயம் குறிப்பிட்டது. ஆதாரை செல்லுபடியாகும் ஆவணத்திலிருந்து விலக்குவதாக, தேர்தல் ஆணையம் கூறியபோது, “… குடியுரிமை என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அல்ல, மாறாக உள்துறை அமைச்சகத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை” என்று அமர்வாயம் கூறியது.

**குடியுரிமை வாக்காளர் உறுதி செய்ய அவசரம் என்ன?**

இரண்டாவது கேள்வி: இப்போது இதற்கு ஏன் அவசரம்? தேர்தல் ஆணையம் குடிமக்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதி செய்ய விரும்பினால், “இந்த செயல்முறையை அது மிகவும் முன்னதாகவே தொடங்கியிருக்க வேண்டும்” என்று அமர்வாயம் கூறியது. நீதிமன்றம் இவ்வாறு இப்போது அவசரகதியில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்கான காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பியது. மேலும் பீகார் தேர்தல்களில் இந்த நடவடிக்கைகளைத் துவக்கி இருப்பதைத் துண்டிக்க முடியுமா என்றும் நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

PEOPLE'S DEMOCRACY

**நீதிபதியின் சந்தேகங்கள் - கேள்விகள்**

தேர்தல் ஆணையம் கேட்டிருக்கும் வினாக்களுக்கான விடைகளை அளிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களை மிகவும் தெளிவாகவே நீதிபதி அடிக்கோடிட்டிருக்கிறார். **“தேர்தல் ஆணையம் கேட்டிருக்கும் தகவல்களை என்னாலேயே அளிக்க முடியாது,”** என்று கூறியிருக்கிறார். **“2025 ஆம் ஆண்டில் ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள ஒருவரின் வாக்குரிமையை நீக்கும் உங்கள் முடிவு, அந்த நபரை அந்த முடிவுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய கட்டாயப்படுத்தும். மேலும் இந்த முழு மோசடியையும் கடந்து, அடுத்த தேர்தலில் அவருக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படும்.”** தேர்தல் ஆணையம் வலியுறுத்தும் தேசியக் குடிமக்கள் பதிவேட்டுக்கான, நடைமுறையைக் காட்டுங்கள், காலவரிசையைக் காட்டுங்கள் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தும் ஆவணங்கள் குறித்தே நீதிபதி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**வாய்மொழி விசாரணையா...**

இறுதியாக, மூன்றாவது கேள்வி: தேர்தல் ஆணையம் என்ன நடைமுறையை பின்பற்றும்? ஒரு வாக்காளர் வாக்குரிமையை இழக்கும் சந்தர்ப்பத்தில் அது பின்பற்றும் செயல்முறையை தெளிவுபடுத்துமாறு தேர்தல் ஆணையத்திடம் நீதிபதிகள் கேட்டனர். நீதிபதி துலியா ஒரு கூர்மையான கேள்வியை எழுப்பினார்: **“மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் ஒரு ‘சுருக்கமான திருத்தம்’ ஒரு வாக்காளரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முன்பு வாய்மொழி விசாரணையைக் கோரினால், ‘தீவிர’ திருத்தம் அந்த செயல்முறையைக் கொண்டிருக்க முடியாது என்று கூற முடியுமா?”**

**ஆதார், வாக்காளர், ரேசன் அட்டை செல்லுபடி ஆதாரமில்லையா?**

மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட விதிகளின் கீழ், உறுதிப்படுத்தப்பட்ட இறப்பு வழக்குகளைத் தவிர, முன்மொழியப்பட்ட வாக்காளர் நீக்கம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும், வாக்காளருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும், இது வாக்காளருக்கு கேட்க நியாயமான வாய்ப்பை வழங்குகிறது. இந்தக் கேள்வி வரிசையின் ஒரு பகுதியாக, சில ஆவணங்களின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மையையும் அமர்வாயம் எழுப்பியது. **‘சிறப்பு தீவிர திருத்தம்’ செயல்பாட்டில் ஆதார், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மற்றும் ரேஷன் கார்டு ஆகியவற்றை ஏன் செல்லுபடியாகும் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில் தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கேட்டது.**

**கால நடைமுறையிலிருந்து விலகிச் செல்லும் தேர்தல் ஆணையம்**

இவைதான் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கேள்விகளாகும். சாதாரணமான காலத்தில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் ஜூன் 24 ஆம் தேதி உத்தரவும், ஆணையம் நிர்ணயித்துள்ள முறையும் காலக்கெடுவும் கடந்த கால நடைமுறையிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றன. இதுபோன்று முன்னெப்போதும் நடந்ததில்லை.

**கொல்லைப்புற சூழ்ச்சி**

**இப்போது தேர்தல் ஆணையம் கொண்டுவந்திருக்கும் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எந்தவிதமான சட்டப்பூர்வ விதிகளும் கிடையாது. இது தேசிய குடிமக்கள் பதிவேட்டு நடவடிக்கையை (NRC), கொல்லைப்புற வழியாகக் கொண்டுவரும் சூழ்ச்சி நடவடிக்கையாகவே தோன்றுகிறது. இதன் விளைவாக, மிகப் பெரிய எண்ணிக்கையிலான மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் உள்ளது. குறிப்பாக பொருளாதார ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் டிஜிட்டல் முறையில் அதிகாரம் இழந்தவர்கள் தங்கள் வாக்குரிமையை இழப்பார்கள். இதேபோன்ற ‘சிறப்பு தீவிர திருத்த’ செயல்முறை இதர மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள நிலையில், இதனை நாட்டிலுள்ள அனைத்துத்தரப்பினரும் ஆழமான முறையில் எடுத்துக்கொண்டு, இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும். இல்லையேல், தேர்தல் ஜனநாயகத்தின் எதிர்காலமே ஆபத்தில் சிக்கக்கூடும்.**

நன்றி :
**‘தீக்கதிர்’**
21.07.2025

---

### லேசான தலைச்சுற்றல்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் அனுமதி!

## அப்பல்லோ மருத்துவமனை அறிக்கை!

சென்னை, ஜூலை 22 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், லேசான தலைச்சுற்றல் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மருத்துவப் பரிசோதனை குறித்து அப்பல்லோ மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழக்கமான காலை நடைபயிற்சியின்போது லேசான தலைச் சுற்றல் ஏற்பட்டது. அதையடுத்து சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள அவருக்குத் தேவையான அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

இவ்வாறு அப்பல்லோ மருத்துவமனையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### நாடாளுமன்ற அலுவல் பட்டியல்

# தமிழில் வெளியாகத் தொடங்கியது!

*புதுடெல்லி, ஜூலை 22-*

*நாடாளுமன்ற அலுவல் பட்டியல் நேற்று முதல் தமிழில் வெளியாகத் தொடங்கியது. மக்களவை அலுவல்கள் குறித்த நிகழ்ச்சி நிரல் பட்டியல் தமிழில் வெளியானது. தொடர் வலியுறுத்தல் காரணமாக நாடாளுமன்ற அலுவல் பட்டியல் நேற்று முதல் தமிழில் வெளியாகத் தொடங்கியுள்ளது.*

*ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே வெளியிடப்பட்டு வந்த நாடாளுமன்ற அலுவல் பட்டியல் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட 10 மொழிகளில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.*

---

### “ஓரணியில் தமிழ்நாடு” கிருஷ்ணகிரி மேற்கு

# மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*கிருஷ்ணகிரி, ஜூலை 22-*

*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் தளி ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர், வேப்பனப்பள்ளி மற்றும் தளி சட்டமன்றத் தொகுதி Booth Digital Agent மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (22.07.2025 -செவ்வாய்க்கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.*

*1. வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி காலை 9.00 மணி SAS திருமண மண்டபம், சூளகிரி*

*2. தளி சட்டமன்றத் தொகுதி காலை 11.00 மணி சப்தகிரி மண்டபம், தேன்கனிக் கோட்டை*

*3. ஓசூர் சட்டமன்றத் தொகுதி மாலை 4.00 மணி மீரா மஹால் திருமண மண்டபம், ஒசூர்*

*இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய , பகுதி, பேரூர் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

### முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த புதல்வர் மு.க.முத்து மறைவு!

# “எங்கள் துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறியவர்களுக்கு நன்றி!”

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, ஜூலை 22-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது அண்ணன் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த புதல்வர் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் இரங்கலும் - ஆறுதலும் தெரிவித்தவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்து வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**எனது அண்ணன் மு.க.முத்து அவர்களது மறைவுக்கு நேரில் வந்து எங்களது துயரில் பங்கெடுத்து ஆறுதல் சொன்ன சகோதரர் செல்வப்பெருந்தகை, தோழர் கே.பாலகிருஷ்ணன், சகோதரர் எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன், பேராசிரி யர் காதர் மொகிதீன், பேராசிரியர் ஜவாஹிருல்லா, வசீகரன், சகோதரர் துரை வைகோ, சகோதரி தமிழிசை சௌந்தரராஜன், கரு. நாகராஜன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சத்யராஜ், விக்ரம் உள்ளிட்ட கலையுலகைச் சேர்ந்த கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், நேரில் வர முடியாத சூழலில் தொலைபேசி வாயிலாக இரங்கலைப் பகிர்ந்துகொண்ட சகோதரர் ராகுல் காந்தி, ஓ.பன்னீர்செல்வம், ஜி.கே.வாசன் மற்றும் எனது இல்லம் தேடி வந்து ஆறுதல் தெரிவித்த சீமான் உள்ளிட்ட அனைவர்க்கும் நன்றி.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### இந்தோனேசியாவில்

# சொகுசு கப்பலில் நேரிட்ட தீ விபத்து !

## 5 பேர் உயிரிழந்த நிலையில் 280-க்கும் மேற்பட்டோர் தப்பினர்!

*ஜகார்த்தா, ஜூலை 22-*

*இந்தோனேசியாவில் சொகுசுக் கப்பலில் நேரிட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 284 பயணிகள் இந்த விபத்தில் இருந்து தப்பியதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. கேம் பார்சிலோனா என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் இந்தோனேசியாவின் ஒரு தீவுகளில் இருந்து கிளம்பி வடக்கு திசையை உள்ள மனோதாவை நோக்கி சென்று கொண்டு இருந்தது. இதில் கப்பல் ஊழியர்கள், பயணிகள் உட்பட 280க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாக தெரிகிறது. தலாட் தீவு அருகே சென்ற போது கப்பலில் திடீரென தீ பற்றியது. தீ கொழுந்து விட்டு எரிந்ததால் அச்சம் அடைந்த பல பயணிகள் உயிரை காப்பாற்றி கொள்ள கடலில் குதித்தனர்.*

*உடனடியாக கடற்கரை கப்பல்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணிகளும் மீட்பு பணிகளும் துரிதப்படுத்தப்பட்டன. உள்ளூர் மீனவர்களும் கடலில் நீந்திச் சென்று பயணிகளை மீட்டு கரைக்கு அழைத்து சென்றனர். லைப் ஜாக்கெட் உதவியுடன் ஏராளமானோர் நீந்தி கரைக்குச் சென்றனர். கரைவந்து சேர்ந்தவர்கள் அதிர்ச்சியுடன் மீட்பு பணிகளை பார்த்து கொண்டு இருந்தனர். இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியானது. தீ விபத்து காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட இந்தோனேசியாவில் படகுகள், கப்பல்கள், விபத்தில் சிக்குவது தொடர் கதையாக உள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 19.7.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு. ஜி.அரவிந்த், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஜி.ரமேஷ், உதவி இயக்குநர் (துணிக்கை) கே.ரவி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் ஆகியோர் உள்ளனர்.

